நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

மடல் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 26 செவ்வாய்க்கிழமை (10-08 1993) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 255

# அரசை ராஜினாமா செய்யக் கோரி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்ட பேரணி

## 1,000 பரல் மண்எண்ணெய் நேற்று வந்து சேர்ந்தது

ஆயிரம் பரல் மண்எண்ணெயுடன் "ஐலண்ட் பிறைட்" என்னும் கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

இக்கப்பலில் ஒரு தொகை தீப்பெட்டிகளும், பாடசாலை அப்பியாசக் கொப்பிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

(உ-3-117)

## உண்ணாவிரதமிருக்கும் கைதிகள் நிலை மோசம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட். 10

யுத்தக் கைதிகள் நேற்று 12 ஆவது நாளாக தமது உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர்.

அவர்களில் அனேகரது உடல்நிலை மிகவும் மோசமாக பாதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. பலர் எழும்பமுடியாத நிலையில் உள்ளனர்.

உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக் கைதிகளில் ஒருவரான பி. எச். பண்டார நேற்று மாலை "புலிகளின் குரல்" வானொலிக்கு கருத்து தெரிவிக்கையில் —

அரச அதிபர் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் வரை உண்ணாவிரதத்தை கைவிடும்படி கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வனசிங்கா விடுத்த வேண்டுகோளை ஏற்று நாம் நீரருந்தத் தொடங்கினோம். ஆனால் அரச அதிபர் இங்கு வந்தும், எமது விடுதலை குறித்து எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

எங்களை விடுவிப்பதற்கு முயற்சி எடுக்கும்படி ஸ்ரீலங்கா அரசையும், அரசாங்கத்தின் சகல பிரிவுகளையும் கேட்டுக் கொள்கிறோம் — என்றார்

(உ-3)

## கைதிகளின் உறவினர்களில் மூவர் கொழும்பு திரும்பினர்

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்த — யுத்தக் கைதிகளின் உறவினர்கள் மூவர் — நேற்று கொழும்பு திரும்பினர்.

சுகவீனம் காரணமாகவே இவர்கள் திரும்பிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு திரும்பியதும், தம்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அங்குள்ள அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கும்படி இந்த மூவரிடமும் உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகள் கோரியுள்ளனர்.

(உ-3)

## மாத நடுப்பகுதியில் 'குமண' உணவுப் பொருளுடன் வரும்

யாழ்ப்பாணம், ஆக. 10

கொழும்புத்துறைமுகத்தில் பொருள்கள் ஏற்றிக் கொண்டு நிற்கும் 'குமண' கப்பல் மாத நடுப்பகுதியில் பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். செயலகத்துக்கான உணவுப் பொருள்களும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான அத்தியாவசிய பொருள்களும் தற்சமயம் கப்பலில் ஏற்றப்பட்டு வருகின்றன

இதேவேளை —

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்த பின் 'வாதுவ' கப்பல் இன்று கொழும்பு நோக்கிப் புறப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-173)

## வவுனியா இரவு ரயிலில் பயணிகளிடம் கொள்ளை!

கொழும்பு, ஆக. 10

கடந்த சனிக்கிழமை வவுனியா இரவு மெயில் ரயிலில் பயணம் செய்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளிடம் இருந்து பணமும் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இனந்தெரியாத 7 பேர் ஆளை வைக்கும் வெள்ளவாயாவுக்கும் இடையில் வைத்து இக் கொள்ளையை நடத்தினர்.

இரு ஐரிஷ் பிரஜைகளிடம் இருந்து 16 ஆயிரம் ரூபாவும், 300 அமெரிக்க டொலர்களும், 100 ஸ்டேர்லிங் பவுண்களும்—

உள்ளூர் பயணிகளிடம் இருந்து 4 தங்க மோதிரங்கள் மற்றும் தங்கச் சங்கிலி ஒன்றையும் அவர்கள் பறித்து எடுத்தனர்.

(த-எ)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 10

நேற்று நண்பகல் 12 மணியளவில் காரைநகர் பகுதியில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ காவலரணில் இருந்து மூளாய் பகுதியை நோக்கி பரவலாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

(உ-3)

## 1953 ஹர்த்தாலை நினைவுகூர்ந்து வியாழக்கிழமை நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஆகஸ்ட் 10

விஜயதுங்கா தலைமையிலான அரசாங்கத்தை ராஜினாமாச் செய்யக் கோரி ஆறு எதிர்க்கட்சிகளின் அணி நாளை மறுதினம் வியாழக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியையும் கூட்டத்தையும் நடத்த உள்ளன.

உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியினதும் நிபந்தனைகளுக்கு அரசு அடிபணிந்து செயற்படுவதால் மக்களின் வாழ்க்கைச் செலவுச் சுமை அதிகரித்துள்ளதை எதிர்த்தும்—

• 1953 ஆம் ஆண்டு நடைபெற்ற ஹர்த்தாலை நினைவுகூரு முகமாகவும் - இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுவதாக எதிரணி வட்டாரங்கள் தெரிவித்தன.

நுகேகொடையில் நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆறு கட்சிகள் எதிரணி கலந்து கொள்ளும்

காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளமாட்டாது. அந்தக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என கூட்ட அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கத்தை ராஜினாமாச் செய்யக்கோரி ஆர்ப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா-மன்னார் வீதியில் பாரிய இராணுவ வேலி!

மன்னார்-வவுனியா வீதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தொடர் காவலரண்களை நிறுவி பாரிய இராணுவ வேலி ஒன்றை அமைத்துள்ளனர். பெருமளவு படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார்—வவுனியா வீதியில் இருந்த சட்டுப்பொத்த, சந்துறுவெல, வீரவில ஆகிய இராணுவ முகாம்கள் கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டதை அடுத்தே இராணுவ வேலியை அமைக்கும் நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் மீண்டும் முகாம்களை அமைத்தால், அவற்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்பதாலேயே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இத்தொடர் காவலரண்கள் அமைக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(உ-3)

## எல்லைப்புறக் கிராமங்களின் பாதுகாப்பை அதிகரிக்க முடிவு

கொழும்பு, ஆக. 10

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடும் எனக் கருதப்படும் எல்லைப் புறக் கிராமங்களின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கையின் ஒரு கட்டமாக —

வில்பத்து மற்றும் அதை அண்டிய கிராமப்புறப் பகுதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் ஆராய்வதற்காக அங்கு படை அதிகாரிகள் குழுவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சென்றார்.

புலிகளின் தாக்குதலையடுத்து வில்பத்து பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை பிரதமர் நேரில் சந்தித்துப் பேசினார்.

அங்குள்ள மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்றும் —

கடமையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு கூடிய வசதிகளும், தொலைத் தொடர்பு சாதனங்களும் வழங்கப்படும் என்றும் பிரதமர் ரணில் அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றிய போது தெரிவித்தார்.

(உ-த-3)

## இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 10

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் [illegible] மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

(உ-5)

## சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் வடக்கே வருவர்

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய உதவிகளை நேரில் கண்டறிவதற்காக கனேடிய அதிகாரிகள் உட்பட சர்வதேச நிதி உதவி வழங்கும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் விரைவில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

கனேடிய தூதரகத்தின் அபிவிருத்திக்குப் பொறுப்பான முதலாவது செயலாளர் டக்ளஸ் ஹெண்டர்சன், கனேடிய அபிவிருத்தி நிதிய அதிகாரி திரு. டொன் ஈ பிறவுணெல், ஐ. நா. அபிவிருத்தி திட்ட ஆலோசகர் மல்கலம் ரைட்வுட் ஆகிய அதிகாரிகளே இங்கு வர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு சென்றிருந்த — யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் — அங்கு வைத்து விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டே சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் வடக்கே வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது எழுதுவினைஞர் சேவை

## 2ஆம் வகுப்பு 'அ' பிரிவு தகுதிப் பரீட்சை நவ. 20இல்

யாழ்ப்பாணம், ஆக. 10

பொது எழுதுநர் சேவையின் இரண்டாம் வகுப்பு 'அ' பிரிவுக்கு நியமனம் பெறுவதற்கான தகுதிப் பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சகல மாவட்ட கச்சேரிகளிலும் எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு பொது எழுதுநர் சேவையின் இரண்டாம் வகுப்பில் 'ஆ' பிரிவில் உள்ளவர்களும்— 1993ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களும்— விண்ணப்பிக்கலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி செப்டம்பர் மாதம் 10ஆம் திகதியாகும்.

இது சம்பந்தமான முழு விவரங்களும் ஜூலை 22ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (இ-100)

## விவசாயிகள் ஓய்வூதியத்தில் சேருவதற்கான திகதி நீடிப்பு

கொழும்பு, ஆக. 10

50 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட விவசாயிகளை விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கான காலக்கெடுவை இவ்வாண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிப்பது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சர் தர்மதாச பண்டா இது தொடர்பாக தெரிவித்த யோசனையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

50-59 வயதான விவசாயிகள் குறைந்தளவில் இத்திட்டத்தில் சேர்ந்திருப்பதை முன்னிட்டும் —

வடக்கு - கிழக்கு மாகாண விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள சந்தர்ப்பமளிக்கும் விதத்திலும் — காலக்கெடுவை நீடிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளும் விவசாயிகளுக்கு அவர்களின் 60 வயது முதல் மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களத்துடன்
யாழ். மாவட்ட சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம்
இணைந்து நடத்தும்
'சித்தமருத்துவத்தை மக்கள் மயப்படுத்தல்'
சம்பந்தமான

## கருத்தரங்கு

மேற்படி கருத்தரங்கு ஆவணி மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்புபவர்கள் 20 — 8 — 1993 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்திற்குத் தங்கள் பெயர், முகவரி போன்ற விவரங்களை அறியத் தரும் வண்ணம் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

எஸ், டிவகலாலா,
பிரா. உ. உ. ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
2-8-1993. (சி-5551)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 — 03 — 1917

உதிர்வு: 24 — 07 — 1992

திருமதி
**நாகலிங்கம் கண்மணி**
(நாகேஸ்வரி வித்தியாசாலை ஸ்தாபகரும், ஒய்வுபெற்ற அதிபருமாகிய கந்தையா நாகலிங்கத்தின் மனைவி)

நினைவலைகள் நெஞ்சங்களில் மோதிக்கொள்ள
தூங்காத இரவுகள் துக்கத்தில் ஆழ
நீங்காத உறவே நீங்கள்
நீங்கி விட்டு ஓராண்டு சென்றதுவோ
நீங்காது, நீங்காது உம் இனிய முகம்
நிழலாகத் தொடர்ந்திடும் எம் உள்ளங்களில்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
(இ-2022)

## பிரிட்டிஷ் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக வரும் அறிகுறி இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ் போதனா வைத்தியசாலைக்குபிரிட்டனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 15 கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை சுகாதார மகளிர் விவகார அமைச்சு வடக்கே வரும் சரக்குக் கப்பல்களில் கட்டம் கட்டமாக அனுப்பும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் இவை வந்து சேருவதற்கான அறிகுறி எதுவும் இதுவரை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருத்துவ உபகரணங்களை ஒரே சமயத்தில் இரு கப்பல்களில் அனுப்பி வைக்குமாறு யாழ் போதனா வைத்தியசாலை உயரதிகாரிகள் கோரி இருந்தனர்.

இது அதிக செலவை ஏற்படுத்துமாதலால் வடக்கே வரும் சரக்குக் கப்பல்களில் கட்டம் கட்டமாக அனுப்பி வைக்கப்படும் என்று சுகாதார மகளிர் விவகார அமைச்சு முன்னர் தெரிவித்திருந்தது.

தற்போது சரக்குக் கப்பல்கள் இங்கு வருகின்ற போதிலும் உபகரணங்களை அனுப்பும் அறிகுறி எதுவும் இல்லை என்றும் —

இந்த வைத்திய உபகரணங்களை அனுப்புவதற்கு அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர் மீண்டும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்றும் அறியப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரிகள் இது குறித்துப் பேசுவதற்காக விரைவில் கொழும்பு செல்ல உள்ளனர்.

இதற்கிடையில், பிரிட்டன் அன்பளித்த வைத்திய உபகரணங்களை இம்மாதத்திற்குள் யாழ்ப்பாணம் எடுத்து வராவிடில் அவை தெற்கே உள்ள ஆஸ்பத்திரிகளுக்குப் பங்கிடப்படும் ஆபத்து உண்டு என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-17)

### செய்திக் கொத்து

**நினைவு மண்டபம்**

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் திரு. கா. வைரமுத்து நினைவாக சென்ற மாதம் 25ஆம் திகதி புதிய மண்டபம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. (க-162)

**பாடசாலையை பொறுப்பேற்க கோரிக்கை**

வடமராட்சிக் கிழக்கில் மிகவும் வசதிகள் குறைந்த நிலையில் உள்ள குடாரப்பில் இயங்கிவரும் ஆரம்பப் பாடசாலையை, கல்வித் திணைக்களத்தை பொறுப்பேற்கும்படி. யாழ். மனித முன்னேற்ற நடுநிலையமும், அப்பகுதியில் உள்ள பொதுஸ்தாபனங்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

பல ஆண்டு காலமாக ஐந்தாம் ஆண்டு வரையுள்ள இப்பாடசாலையினை யாழ். மனித முன்னேற்ற நிலையமே நடத்தி வருகின்றது. (க-144)

**உப்பு சேகரிப்பு**

இவ்வாண்டு பெரு விளைச்சல் கண்டுள்ள வல்லை, மண்டான், கரணவாய் உப்புப் பிராந்தியத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் அதன் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்து உப்பு சேகரிக்கப்படுகிறது- (க-155)

**விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்**

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட பத்து விவசாயிகளுக்கு இச்சங்கத்தால் புதிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன. (க)

**படிப்பகம் இரவில் திறந்திருக்கிறது**

அரியாலை சனசமூக நிலையத்தின் படிப்பகம் இரவு 9 மணிவரை திறக்கப்பட்டுள்ளது. மேற்படி நிலையத்திற்கு ஜெனறேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. (க-17)

**பரிசளிப்பு விழா**

சாவகச்சேரி டச்சுவீதி பழனி ஆண்டவர் ஆலய வேல் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா கடந்த 4ஆம் திகதி மாலை ஆலய முன்றிலில் இடம்பெற்றது. இப்போட்டிகளுக்கான பரிசில்களை சாவகச்சேரி பகுதியிலுள்ள அரச, உள்ளூராட்சி, கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-117)

**இலவச வகுப்பு**

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் ஆதரவில் மூன்று பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் இலவசக்கல்வி வகுப்பு கடந்த 4ஆம் திகதி புதன்கிழமை முதல் இரவு 6-30 மணி தொடக்கம் 9-00 மணி வரை யாழ். கொழும்புத்துறை [illegible] நடைபெற்று வருகிறது. (க-30)

அரசமைப்புத் தொடர்பான

## புதிய தெரிவுக்குழுவின் ஆய்வு எல்லையை நீடிக்குக

### குமார் பொன்னம்பலம் கோரிக்கை

கொழும்பு, ஆக. 10

ஜனாதிபதி ஆட்சி முறை மற்றும் தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக அரசமைப்புக்குக் கொண்டு வரக்கூடிய திருத்தங்களைப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் புதிய தெரிவுக்குழுவின் ஆய்வு எல்லை நீடிக்கப்பட வேண்டும்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு கோரி உள்ளார்.

இந்தத் தெரிவுக்குழு அரசமைப்பு முழுவதையும் மீளாய்வு செய்வதற்கு ஏதுவாகவும் —

தமிழ் மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் வேதனைகள், நெருக்கடிகளை தெரிவுக்குழு எடுத்தியம்ப அவகாசம் அளிக்குமுகமாகவும்- தெரிவுக் குழுவின் ஆய்வு எல்லை நீடிக்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பான தெரிவுக் குழுவிலும் பார்க்க அரசமைப்புத் தொடர்பான தெரிவுக்குழு, இனப்பிரச்சினை விவகாரம் பரிசீலிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடிய குறிப்பிட்ட சில அம்சங்களைக் கொண்டிருக்கும் என்றே எனக்குத் தோன்றுகின்றது என்றும் குமார் பொன்னம்பலம் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ-க)

## வேதாகமங்களைப் பேணும் அந்தணரைப் போற்றுவோம்

### பாராட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 10

"சமயத்தின் உயிர்நாடியான வேதாகமங்களைப் பேணி வருவோர் அந்தணர் ஆவர். அவர்கள் எமது பக்தி மார்க்கத்துக்கு உயிர் கொடுக்கிறார்கள். அவர்களை நாம் போற்ற வேண்டும்."

"நியாய சிரோமணி" பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'மறை திரு அன்னைதாசன்' ஸ்கந்த சாம்ப சிவாச்சாரியார் ஆகியோருக்கு நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற பாராட்டுவிழாவில் உரை நிகழ்த்திய யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் இவ்வாறு கூறினார்,

மாவை ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் விழா நடைபெற்றது. சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விழாவில் உரை நிகழ்த்தியபோது, முருக வழிபாட்டில் குருவழிபாடு சிறப்பாகப் பேசப்பட்டது. குருவடிவாம் என்று அந்தப் பெருமானின் திருவடியைக் காட்டுகின்றார் அருணகிரிநாதர் "சைவ மக்களின் வாழ்க்கையுடன் நெருங்கியதான திருக்கோயில்களைத் தெய்வமணம் கமழும் அருள் நிலையங்களாக மாற்றும் பணியில் அந்தணப் பெருமக்களுடைய பங்கு அளப்பரியது" என்று கூறினார்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் [illegible]போது,

"இறைவனால் படைக்கப்பட்ட மொழியும் கலைகளும் வளர அடித்தளமாக விளங்கிய சிவாச்சாரியார்களை நாம் மறக்கக் கூடாது. ஆலயப் பணிகளையும் அந்தணர்களை போற்றும் முறையிலும் நாம் உரிய செயற்பாடுகளை மேற்கொள்வது முக்கியம் என்று கூறினார்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணன் பேசும் போது,

"மந்திர ஈனம் என்று சொல்லும் குறைகள் இல்லாமல் கிரியைகளை உரிய முறையில் செய்யவும் சைவசித்தாந்த பாரம்பரியத்தில் அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை ஏற்படுத்தும் வகையிலும்

தமது வாழ்நாளை சைவத்தின் மேன்நிலைக்காக அர்ப்பணித்த, சமயத்தை வழி நடத்தும் குருவாக இருக்கும் இவர்களைத் தெய்வத்திற்குச் சமனாக மதிக்கிறோம்" என்று கூறினார்.

பிரம்மஸ்ரீ நா. மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் திரு. சி. கனகரத்தினம் ஜே. பி. உட்பட பலர் பேசினார்கள்.

தேவஸ்தானங்கள் சார்பாக பாலகதிர்காமம் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ கு. குமாரக் குருக்கள் உட்பட சிவாச்சாரியர்கள் பலர் விழா நாயகர்களுக்கு தங்கப்பதக்கம் அணிவித்து பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர். விழா நாயகர்களின் பதிலுரையும் தெய்வீக கானம், வயலின் சோலோ இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம்


ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் துணை

ஏழாலை தெற்கு - வசந்தபுரம்

# ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்



## ஏகவிம்சதின இலட்சார்ச்சனை
(21 தினங்கள்)

## பூர்த்திப் பெருவிழா
12 - 08 - 1993

திருவருளும், குருவருளும் பெருகி விளங்குகின்ற

**வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில்**

1993ஆம் ஆண்டுக்கான இலட்சார்ச்சனைப் பூர்த்திப் பெருவிழா 12-08-1993 அன்று வெகுவிமரிசையாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மனின் திருவருள் கைகூட்டியுள்ளது. பொதுமக்களின் உபயமாக

சிவஸ்ரீ. தி. கெங்காதரக்குருக்கள் அவர்கள் தலைமையில் பக்திவிழா நிகழும்.

23 - 07 - 1993 முதல் தினமும்

'அருள்மொழிச் செல்வர்' 'சொற்பேராழி'

**வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.**

(பரம்பரை அறங்காவலர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், நயினாதீவு)

அவர்கள் தலைமையில் சிவத்தமிழறிஞர்கள், பண்ணிசை விற்பன்னர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் ஆகியோரின் தெய்வீகப் பேருரைகள், பஜனைகள் இடம்பெறுகின்றன.

தற்பொழுது 'செஞ்சொற் சீராளன்', 'தமிழருவி', 'கந்தநிதி', 'சொல்மொழிவேந்தன்'

**த. சிவகுமார்** (அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)

அவர்களின் தொடர் தெய்வீகப் பேருரை நடைபெறுகின்றது.

தினமும் வலி வடக்குப் பிரிவு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பிரதேச ஆணையாளர்

**திரு. க. அருந்தவராஜா**

அவர்கள் தலைமையில் ஒழுக்காற்றுச் செயல்முறைப் போதனைகள் நிகழுகின்றன.

பக்திப் பேரெழுச்சிமிகு பூர்த்திப் பெருவிழாவிலன்று

- விசேட நாதஸ்வர தவில் கச்சேரிகள்
- பண்ணிசை அரங்கு
- பஜனை
- காவடி
- தெய்வீகப் பேருரை
- அன்னதானம் என்பன இடம்பெறும்

## ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நிகழவுள்ள இலவச சேவைகள்

- ★ சிறுவர் இலவசக் கல்வியும் சிறுவர் பராமரிப்பும்
- ★ வயோதிபர் பராமரிப்பும், உதவி வழங்கலும்
- ★ ஊனமுற்றவர்களுக்கான உதவி வழங்குதல்.
- ★ கண் பார்வை இழந்தவர்களுக்கான உதவி வழங்கல்.
- ★ இலவச வைத்திய சேவை நிலையம் [வசதி குறைந்தவர்களுக்கானது]
- ★ மாபெரும் விளையாட்டுப் போட்டி.
- ★ சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை முதலுதவிப் பயிற்சி-களபாவோடை வசந்தபுரம வாழ் சகலருக்கும் அளித்தல். (சான்றிதழ் வழங்கப்படும்)
- ★ சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையில் 35 தாதிகள் – 35 ஆண்கள் படையில் சேர்த்துக் கொள்ளல்
- ★ வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன ஆலயச் சுற்றாடலில் வாழ் மக்களுக்கெனச் சுகாதார வாரம் (1கிழமை) பிரகடனப்படுத்தி, கருத்தரங்கு, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி நடத்துதல் (கீழ், மத்திய, மேற் பிரிவு - சான்றிதழ் வழங்கப்படும்)
- ★ இலவச பண்ணிசைப் பயிற்சி வகுப்புகள்.
- ★ பஞ்சபுராணம் ஓதுதற் பயிற்சி.
- ★ சமய அறிவுப் போட்டிகள்.
- ★ க. பொ. த. [சா/த], [உ/த] இலவச தமிழ், சமயபாட வகுப்புகள்.
- ★ தெய்வீக மகாநாடுகள்; இன்னும் பிற.

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

இவ்வண்ணம்:
**ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.**

ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்
வசந்தபுரம்,
ஏழாலை தெற்கு, ஏழாலை.
10 - 08 - 1993.

(சி/5578)


## ஊழியரின் கடமை நேரம் குறித்துப் சுற்றறிக்கை

யாழ் செயலக ஊழியரின் கடமை நேரம் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 4-15 மணிவரை என்ற விதி கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபர் சகல உத்தியோகத்தர்களுக்கும் விடுத்துள்ள சுற்றறிக்கையில் தற்போதைய சூழ்நிலையைச் சாதகமாக பயன்படுத்தி அநேகமான உத்தியோகத்தர்கள் காலந்தாழ்த்தி கடமைக்கு வருவதாக பொது மக்களிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த முறை கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-100,

## ஆலயங்களில்

சாவகச்சேரி, ஆக. 10

மீசாலை தெற்கு சித்திர வேலாயுதப் பெருமான் கோயில் கார்த்திகை திருவிழா நாளை புதன்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அதனையொட்டி "தானே உமக்கு வெளிப்படும்" பொருவில் மூத்த சமயச் சொற்பொழிவாளர் "செஞ்சொற் [illegible] சர்மா தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்..

(அ)

## எய்ட்ஸ் மரணம்:
## இரண்டாயிரம் ஆண்டளவில் 80 லட்சத்தை எட்டலாம்!

ஜெனிவா, ஆக. 10

எய்ட்ஸ் நோயினால் மரணம் அடைபவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரம் ஆண்டளவில் 80 லட்சமாக உயர்ந்து விடும்.

உலக சுகாதார ஸ்தாபனம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்கு உரிய மருந்தைக் கண்டுபிடிக்க பல ஆண்டுகள் ஆகலாம் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கைலைன் பிறவுண், வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், முயல், பான்சி புறாக்கள், பண்டம் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, மானிப்பாய். (26870)

ஸ்பங்கிளர், பாமால் பாமால் கறுப்பு முட்டைகளும், செக்கி — ஸ்பங்கிளர், பாமால், பாமாஸ் கறுப்புக் குஞ்சுகளும், தாய்க் கோழியுடன் உடன் விற்பனைக்கு உண்டு. பிளான்டி பரடைஸ், இல. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (26878)

### மலிவு விற்பனை

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் 6-8-93 முதல் 14-8-93 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6402)

### தேவை

ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு வேலைகளுக்கு பெண் உதவியாளர் தேவை. புதன், வெள்ளிக்கிழமைகளில் நேரில் தொடர்புகொள்ளவும். மங்களபதி வைத்திய சாலை, இல. 41/5 அரச வீதி, நல்லூர். (26877)

தையல் நிலையத்திற்கு பெண்கள் உடைகள் தைப்பதில் அனுபவமுள்ள பெண் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். Y.M.C.A., உடுவில். (உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக) (26881)

### தவறிவிட்டது

ஆறுமுகம் ராகினியின் 697141188V இலக்க அடையாள அட்டை 30-7-93 அன்று மல்லாகத்திற்கும், தாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் மு கோபாலகிருஷ்ணன், முனை மலை, மானிப்பாய் அல்லது திருமகள் புடைவை அகம், இல. 156, நவீன சந்தை, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (26868)

29-7-93 இரவு அல்லைப் பளை இறங்குதுறையில் இருந்து பஸ் நிலையத்திற்கு செல்கையில் பிரயாணப் பை (சொக்கலேற் நிற கிட்பாக்) தவறிவிட்டது. அதனுள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. கிருபாகரன், இல. 42, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (26869)

### சீயாக்காய்ப் பவுடர்

காவேரி சீயாக்காய்ப் பவுடர் யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம் விநாயகர் களஞ்சியம் ஆஸ்பத்திரி வீதி, சிவசம்பு களஞ்சியம் மின்சார நிலைய வீதி, வெங்கடேசன் வைத்தீஸ்வராச் சந்தி. (26777)

### புலமைப்பரிசில் [ஆண்டு-5]

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 12-8-93 வியாழன் முற்பகல் 6-00, 8-30, 11-00 மணி நேரங்களில் நடைபெறும். விடைத்தாள் 13-8-93 வெள்ளி வழங்கப்படும். எம்மால் வெளியிடப்பட்ட புலமைப்பரிசில் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம் [புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்] (26882)

### மிருதங்க வகுப்பு

பாஷையூர் புனித அந்தோனியார் மிருதங்க இசை மன்ற வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்புகொள்க: டெனிஸ் மனுவல், இல. 24, சென். செபஸ்ரியன் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம். (26876)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## O/L

### ஆண்டு 10, 9 மீட்டல்

| | |
|---|---|
| கணிதம் — | சதீஸ் |
| விஞ்ஞானம் — | தயாநிதி |
| சமூகக்கல்வி — | கியூபேட் |
| தமிழ் — | பிரதீபன் |
| ஆங்கிலம் — | கிரிதரன் |
| வர்த்தகம் — | ஸ்ரீ |

ஆரம்பம்:
**10 - 8 - 1993**
காலை 8 மணி.
(சி-5656)

### சாரணர் சேவை

யாழ். மாவட்ட சாரணர் சங்கம் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் உற்சவ கால சேவையை யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் திரு. இ. மகேந்திரன் மேற்பார்வையிலும் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. க. ஏகாம்பரநாதன் பொறுப்பிலும் செய்து வருகின்றது. நிர்வாக ஒழுங்குகளை உதவி சாரண ஆணையாளர் திரு. இ. ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார்.

### ஒளி வீச்சு வீடியோ சஞ்சிகை

நிதர்சனம் தயாரித்து வெளியிடும் 1993 ஜூன் மாத ஒளி வீச்சு வீடியோ சஞ்சிகை இன்று 10ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு நிதர்சனம் ஒலி ஒளி தொழில் நுட்பக்கல்லூரியில் காண்பிக்கப்பட உள்ளது. (இ)

### குளிர்சாதன பெட்டி

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கு மன்னாரில் இயங்கும் குளிர் சாதனப் பெட்டி ஒன்று அண்மையில் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளது

### கிளிநொச்சியில் சிறுபோகம் நல்ல விளைச்சல்

கிளிநொச்சி ஆக. 10
கிளிநொச்சி பகுதியில் இம்முறை சிறுபோக நெற்செய்கை நல்ல விளைச்சலை அளித்துள்ளது.
சிறுபோக நெற்செய்கை அடுத்த மாதம் அளவில் அறுவடை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-17)

## O/L DEC 93

- கணிதம்
- விஞ்ஞானம்
- தமிழ்
- சமூகக்கல்வி
- ஆங்கிலம்
- சமயம்
- வர்த்தகம்
- விவசாயம்
- மனைப் பொருளியல்
- சித்திரம்
- சங்கீதம்
- நடனம்

ஆகிய பாடங்களுக்கான
- பாட வகுப்புக்கள்
- வினா விடை வகுப்புக்கள்
- மாதாந்த பயிற்சிப் பரீட்சைகள்

புதிய பிரிவுகள்
ஆரம்பம்:- ——> 10-08-93

**BOND** கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம். (6409)

## 31ஆம் நாள் அந்தியேட்டி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 23 — 06 — 1940 | 11 — 07 — 1993 |

### துரைராஜா குலசேகரம்
(தாம்பாளம்)

இன்று (10 - 8 - 1993) அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை நடைபெற இருப்பதால், இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பஞ்சாட்சரம் பரமேஸ்வரி
குடும்பத்தினர்.

44, கொழும்புத்துறை வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (26879)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 11 — 03 — 1932 | 22 — 07 — 1992 |


அமரர்
### தாமோதரம்பிள்ளை தங்கராசா
திதி: 10 - 08 - 1993

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி, திடீரென மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! ஓர் ஆண்டென்ன நூறாண்டு சென்றாலும், உங்கள் அன்பு முகமும், நினைவுகளும் எம் நெஞ்சை விட்டு நீங்காதப்பா!

தங்களின் ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

'இரத்தின வாசா'
வட்டு- கிழக்கு,
வட்டுக்கோட்டை. (சி/5655)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 14 — 02 — 1949 | 10 — 08 — 1989 |

### இராமநாதன் கருணாகரன்
[தொல்புரம்]

நற்றமிழீழமதில் நீர் மறைந்து
நாலாண்டு சென்றிட்டாலும்
நம் உயிரே கருணாகரா!
நாமும்மை மறவோமையா.

என்றும் உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்,
மைத்துனி, உறவினர்,
நண்பர்கள் குடும்பத்தினர்.

செல்வா வீதி,
தொல்புரம். (6405)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 13 — 03 — 1956 | 10 — 08 — 1985 |

### கமலாதேவி சுப்பிரமணியம்

அன்பின் சிகரமே! அருமை அம்மா! நீர் மறைந்து எட்டு ஆண்டுகள் மறைந்தாலும், உங்கள் நினைவுகள் மறையவில்லை. உங்கள் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

கணவன், மகன்-மயூரன்.

கிறீஸ்தவக் கல்லூரி முன்பு,
கோப்பாய். (26875)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டமா?

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உலக ஒத்துழைப்புக்கான அமைப்பு சமர்ப்பித்த திட்டத்தை இலங்கை அரசு நிராகரித்து விட்டது.

இலங்கையில் சமஷ்டி அரசமைப்பை உருவாக்கி இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பது அந்தச் சமாதானத் திட்டத்தின் பிரதான தொனிப் பொருள். பிரச்சினையைத் தீர்க்குமாறு ஐக்கிய நாடுகள் சபையை இருசாராரும் அழைக்க வேண்டும். ஐ. நாவின் மேற்பார்வையிலேயே யுத்த நிறுத்தம் செய்யப்பட்டு வடக்கு-கிழக்கில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது செயற்படுத்தலுக்கான யோசனைகள்.

இந்தத் தீர்வுத் திட்டத்தை அரசினர் மிகக் குறிப்பாக இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நிராகரித்து விட்டார். சமாதானத் திட்டத்தை நிராகரித்தமைக்கு அவர் மூன்று காரணங்கள் தெரிவித்திருக்கிறார். இனப்பிரச்சினையில் வெளித் தலையீடு தேவையில்லை. தீர்வுத் திட்டம் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக உள்ளது. ஸ்ரீலங்காவுக்கு ஏற்புடையது அல்ல — என்பதே அவை மூன்றுமாகும்.

இனப்பிரச்சினையில் வெளித் தலையீடு தேவையில்லை என்று பிரதமர் கூறுகிறார். ஆனால் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சில நாட்களுக்கு முன்னர்தான், மலேசிய செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச உதவியை நாடப்போவதாகத் தெரிவித்திருந்தார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் அரசாங்கத் தலைவர்களிடையே ஒத்த கருத்தில்லை, கூட்டுப் பொறுப்புமில்லை. ஜனாதிபதி ஒரு பக்கம் போக நினைக்கிறார். பிரதமர் அதற்கு எதிர்ப் பக்கம் நடக்க முற்படுகிறார்.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையும் இலக்கும் தனித் தமிழீழம். ஆனால் சமாதானத் திட்டத்தில் சமஷ்டி அரசமைப்பும் அரசும் உருவாக்கப்பட வேண்டும் என்றே யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க அந்தத் திட்டம் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமானது என்று பிரதமர் கூறுவது என்ன பொருத்தம்?

சமஷ்டி அரசமைப்பு ஸ்ரீலங்காவுக்கு ஏற்புடையது அல்லவெனில் ஒற்றையாட்சிக்குள் தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று அவர் கருதுகிறாரா? தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று பிடிவாதம் செய்வதால் நாட்டைக் காப்பாற்றலாம் என்று எண்ணுகிறாரா?

சிங்களவர்களுக்குச் சாதகமான தீர்வு. இனப்பிரச்சினையைத் தீர்க்காது, அதனை ஆயுதமாகக் கொண்டு ஆட்சிக்கு வருவது. தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவே அடிமை நிலையில் வைத்திருப்பது, இந்த வழமையான சிங்களத் தீவிரவாத 'சித்தாந்த' வட்டத்திற்குள்ளேயே ரணிலும், அரசும் இன்னமும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்ட நினைக்கிறார்கள் என்பது தெளிவாகிறது!

இந்தச் 'சித்தாந்தங்களும்' தீவிரவாதமும் நாட்டுக்கு நன்மை செய்வதைவிட தீமையையே செய்யும் என்பதை இவர்கள் எப்போது புரிந்து கொள்வர்.

வெளிச்சக்திகள் பலவந்தமாகவே வந்து தலையிடும் என்பதை உய்த்துணரக் கூடிய சிறியளவிலான பொதுவிவேகம் தானும் சிங்களத் தலைவர்களுக்கு இல்லாதிருப்பது ஒரு விதத்தில் தமிழர்களுக்கு நன்மையாகவே முடியும். இன்றைய உலக அரசியல் போக்கினைத் தெரிந்து கொள்ளாது விடாப்பிடியாக கிணற்றுத் தவளைகளாகவே அவர்கள் இருக்க விரும்பின் இரண்டு நாடுகள், இரண்டு அரசுகள் தோன்றுவதற்கு மறைமுகமாக வழிசெய்கிறார்கள் என்பதாகும்.

# நேர்முகப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

வடக்கு—கிழக்கு மாகாண சபையினால் எதிர்வரும் 5 ஆம், 20 ஆம் திகதிகளில் நடத்தப்பட இருந்த எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்குமான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை அந்த நாட்களில் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமலையில் நடைபெற இருந்த இந்தப் பரீட்சையை இங்கு நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும்—

பிறிதொரு திகதியில் அந்தப் பரீட்சை யாழ். செயலகத்தில் நடத்தப்படும் என்றும்—

இதன் நிமித்தம் பரீட்சார்த்திகள் திருமலை செல்லவேண்டியதில்லை என்றும் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (த-5)

# சிற்றூழியர்களுக்கான நேர்முகப் பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் நடக்கும்

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சுக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறவிருக்கின்றன.

இத்தகவலை யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலையில் நடைபெற ஏற்பாடாகி இருந்த இந்த நேர்முகப் பரீட்சையை, யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கையை மாகாண சபை ஏற்றுள்ளது என்றும்—

விரைவில் இங்கு நேர்முகப் பரீட்சையை நடத்த தாம் ஏற்பாடு செய்துள்ளதாகவும்—

பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மேலும் தெரிவித்தார்.

மத்திய அரசின் கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்களை நிரந்தரமாக்கும் பரீட்சைகளையும் இங்கு நடத்த தாம் முயற்சி மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவிருப்பது தெரிந்ததே. (உ-3)

# பரீட்சை வினாத்தாள்கள் இன்று எடுத்து வரப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 10

தற்போது நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் இரண்டாவது தொகுதி வினாத்தாள்களும்—

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெற உள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்களும் இன்று யாழ். வந்து சேரும் என யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து வினாத்தாள்கள் கப்பல் மூலம் அனுப்பப்பட இருப்பதாக கொழும்பில் இருந்து யாழ். கல்வி அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று காங்கேசன் துறைக்கு வரும் ''நரோமா'' கப்பல் மூலம் அவை திருமலையில் இருந்து எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை—

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் சுட்டிலக்கப் பட்டியலை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் யாழ். கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளும்படி அவர் கேட்டுள்ளார். (த-5)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டப முன்றிலில் தெய்வீக இசை அரங்கில் பேபி சரோஜா ஐயரின் இன்னிசை மாலை 6 மணி முதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ மூத்த விநாயகர் கோயிலில் 5 15 — 6.15 'அஞ்ஞாதவாசம்' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்-

பிற்பகல் 2-3 மணி வரை ''சும்மா இரு'' எனும் பொருளில் திரு. சிவ. மகாலிங்கம் சமயச் சொற்பொழிவு.

மாலை 5.30 — 6 30 மணி வரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி ''அதிபதி சூரன் ஆற்றிய போர்'' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3.00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம். (க-111-126)

# திருவடிநிலையில் கடற்படைக்கப்பல்

சுழிபுரம், ஆகஸ்ட். 10

சுழிபுரம் திருவடிநிலை கடல் பிராந்தியத்தில் ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான பாரிய கடற்படைக் கப்பல் ஒன்று நேற்றுக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடற்படையினரின் ரோந்தும் அதிகரித்துக் காணப்பட்டது. (த-28)

# தபால் இன்றும் விநியோகம்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட். 10

குமாரிக் கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்கள் இன்றும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுமென வட மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார்.

கப்பலில் எடுத்துவரப்பட்ட 96 தபால் பொதிகளில் 28 வெளிநாட்டுத் தபால் பொதிகளும் 56 உள்நாட்டுத் தபால் பொதிகளும், 12 பார்சல் பொதிகளும் அடங்கும். (த-162)

### ஊறணி கடற் சம்பவம்:

# பலாலியில் உள்ள 9பேரையும் விடுதலை செய்விக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 10

கடந்த 29 ஆம் திகதி ஊறணிக் கடற்பரப்பில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் 9 பொதுமக்களையும் விடுவிக்கும் முயற்சியில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஈடுபடவிருக்கிறார்.

நாளை கொழும்புக்கு புறப்படும் அரச அதிபர், வழியில் பலாலியில் மேற்படி 9 பேரையும் விடுவிப்பது குறித்து படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

# 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவு

இலங்கை — இந்திய அணிகளுக்கிடையில் கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்ற மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஒரு விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்களுடன் நேற்றுக் காலை தனது இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி நேற்று ஆட்டம் முடிவடைந்தபோது 6 விக்கெட் இழப்புக்கு 352 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அஸங்க குருசிங்க 35, ரோஹான் மகாநாம 157, ஹசான் திலகரத்ன 86 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஓட்ட விபரம் வருமாறு:-

இலங்கை: 351 ஓட்டங்கள், 6 விக்கெட் இழப்புக்கு 352 ஓட்டங்கள்.

இந்தியா; 446 ஓட்டங்கள்.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் வெற்றியீட்டியுள்ளது.

முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரண்டாவது டெஸ்டில் இந்தியா வென்றது. (உ)

# இனத்துவேச தாக்குதல்கள் ரொறன்ரோ மேயர் கண்டனம்

இனத்துவேச அடிப்படையில் நடத்தப்படும் வன்முறைகளை கனடாவின் ரொறன்ரோ மாநகர முதல்வர் ஜீம் லோரன்ஸ் வன்மையாகக் கண்டித்துள்ளார்

அண்மையில் ரொறன்ரோ மாநகரில் நடத்தப்பட்ட ''றொக் கொன்சட்'' என்ற களியாட்ட வைபவம் ஒன்றில் சிறுபான்மை இன மக்களை துவேசிக்கும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அத்துடன் இக்களியாட்ட நிகழ்ச்சியை பார்வையிட்டு விட்டு திரும்பிக்கொண்டிருந்த — விநாசித்தம்பி என்று அழைக்கப்படும் — இலங்கைத் தமிழர் கடுமையாகத் தாக்கப்பட்டார். காயமடைந்த அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரை தாக்கிய இன வன்முறையாளரை கனேடிய பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ரொறன்ரோ நகரில் நடந்த இத் தாக்குதலையும், இது போன்று நடத்தப்பட்ட இனத்துவேச தாக்குதல்களையும் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக முதல்வர் ஜீம் லோறன்ஸ் கூறியுள்ளார். (உ-3)

# நல்லூரில் இலவச கண் பரிசோதனை

இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்று நல்லூரில் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நாளை புதன்கிழமையும், 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெற உள்ளது.

இரண்டு நாட்களிலும் காலை 8.30 மணியில் இருந்து நண்பகல் 12.30 வரையும், பிற்பகல் 3.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் கண் பரிசோதனை நடைபெறவுள்ளதாக அதனை ஏற்பாடு செய்துள்ள சுண்டுக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகச் செயலாளர் செல்வி திருநாவுக்கரசு நயனி தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை பாடசாலை வைத்திய அதிகாரி திருமதி க. பாலயோகமும், யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் ஆகியோர் அனுசரணையுடன் கண் பரிசோதனை முகாம் நடாத்தப்படும். (அ-30)

# உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 ஆக உயர்வு

சென்னை, ஆக. 10

சென்னை ராஷ்ட்ரீய சுயம் சேவக் (ஆர்.எஸ் எஸ்.) பணிமனைக் கட்டடக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்தது.

ஆர். எஸ். எஸ்ஸின் தமிழக மாநில அமைப்பாளர் காசிநாதனும் உயிரிழந்தவர்களில் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)




## உரிமை கொண்டு வா!

நேரும் துயர் யாவையுமே - முருகா
நேரில் வந்து தீர்க்க வேண்டும் - முருகா
கோரும் உரிமை யாவையுமே - முருகா
கொண்டு வந்து சேர்க்க வேண்டும் - முருகா
போரும் இங்கே ஓய வேண்டும் - முருகா
புதுயுகமும் மலர வேண்டும் - முருகா
வாரும் எங்கள் துயர்தீர்க்க - முருகா
வண்ண மயில் ஏறி வா - முருகா

காரைநகர் எம். பி. அருளானந்தன்.

அளவான நீர்ப்பாசனம் அருமையான சிம்மாசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லதம்பி இராசம்மா

கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்த நல்லதம்பி இராசம்மா 9 - 8 - 93இல் காலமானார். இவர் காலஞ் சென்ற மலேசியன் பென்சனியர் D V. நல்லதம்பியின் அன்பு மனைவியும், சிவஞானசேகரம் (மலேசியா), காலஞ்சென்ற திருஞானசேகரம் (மலேசியா) காலஞ் சென்ற திருமதி தங்கமணி செல்வரத்தினம் ஆகியோரின் தாயாரும், கமலாதேவி (மலேசியா), சித்தி (மலேசியா), காலஞ்சென்ற செல்வரத்தினம் (Supdt Of Audit) ஆகியோரின் மாமியாரும், செல்லம்மா, செல்லையா மலேசியா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபாசேகரம் (மலேசியா) தனசேகரம் (மலேசியா), சிவசேகரம் (மலேசியா), சுரேஷ் (மலேசியா), சுசிலா (அமெரிக்கா), திருச்செல்வம் (ஜப்பான்), காலஞ்சென்ற நற்செல்வம், திருமதி சாந்தினி ஜெகதீஸ்வரன் (ராஜா ஹெஸ் மில் கொக்குவில்), செந்தில்செல்வன் ஜேர்மனி) ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10 - 8 - 93) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும் இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
திரு. ஜெகதீஸ்வரன்

ராஜா மில்,
கொக்குவில். (சி/5577)

## திருமதி சிவசக்தி (றூத்) மேதர் சந்திரன்

திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் கொழும்பில் வசித்தவருமான திருமதி சிவசக்தி (றூத்) மேதர் சந்திரன் (ஆசிரியர் மொறட்டுவ முஸ்லீம் மத்திய மகா வித்தியாலயம்) அவர்கள் கொழும்பில் 30-07-1993 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மேதர் சந்திரனின் அன்பு மனைவியும் பிரசன்னா, நிருத்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. இ. தெட்சணாமூர்த்தி இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற திருமதி நல்லம்மா தெட்சணாமூர்த்தி இளைப்பாறிய ஆசிரியர்) யின் அன்பு மகளும், திரு. திருமதி கொட்டன் நேசதுரை மேதரின் (U.K), அருமை மருமகளும், திருமதி இராஜேஸ்வரி ஐங்கரமூர்த்தி (கொழும்பு, திருமதி லோகாம்பிகை பேரின்பராசா (U.K, திருமதி சுசீலா கைலைநாதன் (மலேஸியா), திருமதி கார்த்திகா பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செ. ஐங்கரமூர்த்தி (முன்னாள் வர்த்தகர்-கெக்கிராவை), காலஞ் சென்ற க. பேரின்பராசா (பொறியியலாளர், U.K), திரு. கைலைநாதன் (புகையிரதப் பகுதி, மலேஸியா), திரு. சொ. பாஸ்கரன் முகாமையாளர், New Esty Learners), வைத்திய கலாநிதி சொலமன் மேதர் (ஆஸ்திரேலியா), திருமதி லலிதா பாலச்சந்திரன் (கொழும்பு, திரு பிராங்ளின் மேதர் (கொழும்பு), திருமதி சாந்தினி ஸ்பென்சர் (U.K), திரு குமார் மேதர் (ஆஸ்திரேலியா), வண. பிதா ஜெபக்குமார் மேதர் (மெதடிஸ்த்த ஆலயம், களுத்துறை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03 08-1993 செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சொ. பாஸ்கரன்
திருமதி கார்த்திகா பாஸ்கரன்

6/1, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி, (26890)

## நாகலிங்கம் கந்தையா

எழுவைதீவைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தையா அவர்கள் 20-7-93 இல் காலமானார். இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், ஏகாம்பரத்தின் தகப்பனாரும், மாணிக்கத்தின் மாமனாரும், சிதம்பரத்தின் சகோதரரும், கதிர்காமரின் மைத்துனரும், நயினாதீவு நாகநாதன் - காமாச்சி தம்பதிகளின் சம்பந்தியும், கேதீஸ், வதனி, வேணி, வாணி ஆகியோரின் பேரனுமாவார்.

இவரின் நலடக்கம் எழுவைதீவில் 23-7-93 இல் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்;
ஏ கேதீஸ்வரன்

வாகப்பர் சிறுவர் பாடசாலை,
பிரதான வீதி.
குருநகர். (26888)

## முத்தையா பூபதி

நவாலியைப் பிறப்பிடமாகவும், கரம்பன் இழக்கை புகலிடமாகவும், தற்போது வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியில் வசித்தவருமாகிய முத்தையா பூபதி நேற்று திங்கட்கிழமை (9 - 8 - 93) காலமாகிவிட்டார். இவர் திருமதி துரைராஜா சத்தியபாமா, மனோகரன் ஆகியோரின் தாயாரும ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை (10-8-93) முற்பகல் 10 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
மனோகரன
(மகன்)

பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (26889)

# விளையாட்டு நிகழ்வுகள்

காந்தி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — சுன்னாகம் சிங்கபாப்பாணர் விளையாட்டரங்கில் — நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3. 30 மணி:- றோயல் வி. க எதிர் அறிவொளி வி க.
★ 4 30 மணி:- ஐக்கிய வி. க. எதிர் அவ வெட்டி விநாயகர் வி க.

## ''விளக்கு''

### மாத சஞ்சிகை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை ''விளக்கு'' என்ற பெயரில் மாத சஞ்சிகை ஒன்றை வெளியிடவுள்ளது. (க

## அரசை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாட்டப் பேரணி நடத்துவது சம்பந்தமான ஏற்பாடுகளை ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உத்தியோபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

அங்கு பிரசன்னமாகி இருந்த எதிர்க்கட்சிகளின் பிரமுகர்கள் வியாழக்கிழமை நடைபெற இருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணி குறித்து பின்வரும் விளக்கக் குறிப்புகளைத் தெரிவித்தனர்;-

விஜேதுங்கா தலைமையிலான ஐ.தே. கட்சி அரசாங்கம், உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் நிபந்தனைகளுக்கு முற்று முழுதாக அடிபணிந்துள்ளது. அந்த நிபந்தனைகளை மக்களுக்கோ, எதிர்க் கட்சியினருக்கோ கூறாது மறைத்தும் வருகின்றது.

ஏகாதிபத்தியவாதிகளின் நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்துள்ள அரசு, ஏழை மக்கள் அனுபவிக்கும் உதவிகளை ஒழிக்கவும் கங்கணம் கட்டி நிற்கிறது.

ஜனாதிபதி பிரேமதாசா தமது கடைசிக் காலத்தில் உலகவங்கியின் நிபந்தனைகளை நிராகரித்து வந்தார். ஜனசக்தி, மற்றும் இலவச மதிய உணவுத் திட்டங்களை ஒழிக்க வேண்டும் என்ற உலக வங்கியின் ஆலோசனைகளை அவர் நிராகரித்து வந்தார்.

ஆனால் விஜேதுங்கா அரசுக்கு ஏழை மக்கள் வாழ்வில் அந்தளவுக்குக் கூட அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வருடம் பிரதமர் ரணில் பாரிஸுக்குச் சென்று 84 கோடி அமெரிக்க டொலர்களை கடன் உதவியாகப் பெற்று வந்தார். ஆனால் அந்தக் கடனைப் பெறுவதற்காக அரசு ஒப்புக்கொண்ட நிபந்தனையை வெளியிடுமாறு நாடாளுமன்றில் நாம் கேட்டபோது அதற்கு மறுத்து விட்டனர். அந்த நிபந்தனைகளை மக்களுக்குத் தெரியப்படுத்தாது மறைக்கின்றனர்.

மக்களின் கடன்பளு அதிகரித்து வருகிறது நாட்டில் புழக்கத்தில் உள்ள ஒவ்வொரு 100 ரூபாவிலும் 30 ரூபா கடனை மீளளிப்பதற்கு ஒதுக்கப்படுகிறது.

இத்தகைய நிலையால், 1953 ஆகஸ்ட் ஹர்த்தால் நடைபெற்ற போது இருந்த அதே பாதிப்பான சூழ்நிலையிலேயே இப்பொழுதும் மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள், அதனாலேயே 1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தாலை நினைவு கூரும் விதத்தில் ஆர்ப்பாட்டப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம்.

காமினியைப் பொறுத்தவரையில் அவரும் உலக வங்கிக்கு அடிமையாகும் நோக்குடையவரே. அதனால் பேரணியில் கலந்துகொள்ளுமாறு அவருக்கு அழைப்பு விடுவது பொருத்தமற்றது. (அ-6)

# தேர்தல் முறைப்பாட்டை விசாரிக்க தெரிவுக் குழு

கொழும்பு, ஆக 10 நடந்த ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவை சம்பந்தமாக தேர்தல் ஆணையாளர் விடுத்த அறிக்கைகள் குறித்து ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இத்தேர்தல்களின் போது பயமுறுத்தல்களும், முறைகேடுகளும் இடம்பெற்றதாக தேர்தல் ஆணையாளர் தன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக ஆராயவே இந்த தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயமுறுத்தல்கள், முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளை செய்ய விரும்புவோர் அவற்றை எதிர் வரும் செப்டம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு ஜெயவர்த்தனபுர கோட்டைக்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவுக்குழு பின்னர் முறைப்பாட்டாளரை நேரில் அழைத்து விசாரணை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

# வவுனியா விவசாயக் கல்லூரி:

## டிப்ளோமாக் கற்கை நெறி விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம். ஆக 10 வவுனியா விவசாயக் கல்லூரி, விவசாய டிப்ளோமா (1993-94)வுக்கான, ஈராண்டு கால கற்கைநெறிக்கு விண்ணப்பங்களைக் கோரி உள்ளது.

ஜி. சீ ஈ. உயர்தரப் பரீட்சையில் விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாயம், புவியியல் ஆகிய பாடங்களில் ஏதாவது நான்கில் ஒரே அமர்வில் சித்தி அடைந்தவர்களும் —

விண்ணப்ப முடிவு திகதியான 20-8-1993 அன்று 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இருபாலாரும் — விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 28 ஆம் திகதி பொது அறிவு விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பாடங்களில் நடைபெறும்.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

2-7-93 வர்த்தமானியில் இது தொடர்பான விவரங்கள் வெளியாகி உள்ளன என்று வவுனியா விவசாயக் கல்லூரி அறிவித்துள்ளது. (இ)

## புதிய குடிசைகள்

மானிப்பாயில் இயங்கிவரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த மக்களுக்கு புதிதாக 180 குடிசைகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது இத்திட்டத்துக்கமைய முதற்கட்டமாக மானிப்பாய் செல்லமுத்து அகதி முகாமில் பல புதிய குடிசைகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (க-152

# சாகித்திய பரிசளிப்பு: விழா ஆக. 22 இல்

கொழும்பு ஆக. 10 1991 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நூல்களுக்கான சாகித்தியப் பரிசளிப்பு எதிர் வரும் 22 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் சாகித்திய விழாவில் வழங்கப்படும்

பரிசு பெற்ற நூல்களுக்கு பணப் பரிசாகப் பத்தாயிரம் ரூபாவும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன

நாவற்குழியைச் சேர்ந்த கலாநிதி கே. எஸ். நடராசன் ''கவிக்குற்பரசி'' கவிதை நூலிற்காகவும் —

யாழ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கலாநிதி சி. சிற்றம்பலம் 'பண்டைய தமிழகம் சமூகவியலும் மனிதப் பண்பியலும்'' நூலிற்காகவும் —

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த புலவர் நா. சிவபாதசுந்தரனார் ''புறப் பொருள் வெண்பாமாலை'' இரண்டாம் பகுதி ஆராய்ச்சி நூலிற்காகவும் —

ஏழாலை மேற்கைச் சேர்ந்த பண்டிதர் மூ. கந்தையா ''சிவஞான சித்தித் திறவுகோல் நூலிற்காகவும் —

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி இ. பாலசுந்தரம் '' நாட்டார் இசை இயல்பும்,பயன்பாடும்'' நூலிற்காகவும் யாழ்ப்பாணத்திலிருந்து சாகித்திய பரிசுகளைப் பெறுகின்றனர்.

தமிழ் சாகித்திய விழாவினை ஒட்டி இம்மாதம் 20, 21 22 ஆகிய மூன்று தினங்களிலும் நாட்டார் வழக்காற்றியல் கருத்தரங்கொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. (க-162)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை மகாலிங்கம்

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை மகாலிங்கம் காலமானார்

இவர் சாரதாதேவியின் அன்புக் கணவனும், மகாலட்சுமி, சண்முகலிங்கம் நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி, சற்குருநாதன் (சுவிஸ், நாகதீபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), நாகருபன், நாகலட்சுமி (சைவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரத்துவம் எய்திய விவேகானந்தனின் மாமனும், மகேந்திரம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரரும், முத்துத்தம்பி துரைராஜாவின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 10 - 8 - 93) செவ்வாய்க்கிழமை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 12.00 மணியளவில் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
மு. சண்முகம் (இராசேந்திரம்)
(மைத்துனர்)

''மகாலக்ஷ்மி வாசம்''
இணுவில் தெற்கு. (26886)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org